◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED24 NEWS
हर खबर, हर शहर

# நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION UNDER PROCESS
Application No. T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN 24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

◆ DIGITAL NEWS NETWORK ◆
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता

TAMIL NADU | நீட் 24 நியூஸ் · ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம் | 15 November 2026

## சிக்கல் சிங்கரவேலர் கோவிலில் கந்த சஷ்டி தேரோட்டம்



தமிழ் கடவுளான முருகனின் அறுபடை வீடுகளுக்கு இணையான ஸ்தலமாக, நாகை மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சிக்கல் சிங்காரவேலவர் கோவில் விளங்குகிறது. இத்தகைய சிறப்புகளைக் கொண்ட சிக்கல் சிங்காரவேலவர் கோவிலின் கந்தசஷ்டி பெருவிழா கடந்த 13 ஆம் தேதி காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் வெகு விமர்சையாக துவங்கியது. கந்த சஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதையொட்டி சிங்காரவேலவர், வள்ளி, தெய்வானையுடன் தேரில் எழுந்தருளினர். அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் காமராஜ் தேரினை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைக்க, பக்தர்கள் நான்கு மாட வீதிகள் வழியாக கந்தனுக்கு அரோகரா... முருகனுக்கு அரோகரா... என பக்தி பரவசத்துடன் தேரினை இழுத்து வந்தனர். இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று முருகப்பெருமானை சாமி தரிசனம் செய்தனர். தேரோட்டத்தின் போது சிவ வாத்தியங்கள் முழங்க பரதநாட்டிய குழுவினரின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. கந்தசஷ்டி விழாவையொட்டி சிக்கல் சிங்காரவேலவர் கோயிலின் முக்கிய நிகழ்ச்சியான முருகப்பெருமான் தன் தாயிடம் வேல் வாங்கியதும் திருமேனி எங்கும் வியர்வை பொழியும் அருட்காட்சி தரும் நிகழ்ச்சி இன்று இரவு சிக்கலில் நடைபெறுகிறது. இதில் கோவிலில் வீற்றிருக்கும் வேல் நெடுங்கண்ணி அன்னையிடம், முருகப்பெருமான் 'சக்தி வேல் வாங்கி' திருச்செந்தூரில் 'சூரனை சம்ஹாரம்' செய்தது குறிப்பிடத்தக்கது.

— MAHENDRAN M

### திருப்பூண்டியில் சிபிஐ மற்றும் தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அனுப்பும் போராட்டம்



நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டி தபால் நிலையம் முன்பாக உச்ச நீதிமன்றத்திற்கு தபால் அனுப்பும் போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாய சங்கம் கீழையூர் ஒன்றிய குழு சார்பில் நடைபெற்றது. காவிரியின் குறுக்கே கர்நாடக அரசாங்கம் மேகத்தாட்டு அருகில் அணைக்கட்டு முயற்சிப்பதை நடுவர் மன்ற தீர்ப்பின்படி காவிரியில் குறுக்கே அணைக்கட்டக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கர்நாடகா அரசுக்கு வலியுறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் எம். ஹாஜா அலாவுதீன் தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய தலைவர் என்.முருகையன் தலைமை வகித்தனர். இப்போராட்ட நோக்கங்களை விளக்கி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில குழு உறுப்பினரும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலருமான டி.செல்வம் பேசினார்.இப்போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.காந்தி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய செயலாளர் வி. சுப்பிரமணியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர்கள் டி.கண்ணையன், டி சந்திரகாசன்,தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய தலைவர் எஸ். பக்கிரிசாமி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஒன்றிய செயலாளர் ஏ எஸ்.பகவத்சிங், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூண்டி கிளை செயலாளர் இளையராஜா, பெரிய தும்பூர் கிளை செயலாளர் அறிவழகன், வாழக்கரை கிளை செயலாளர் தினேஷ், காமேஸ்வரம் கிளை செயலாளர் கவியரசன், சிந்தாமணி கிளை செயலாளர், சபாபதி கீழப்பிடாகை கிளை செயலாளர் ஞானசம்பந்தம், ஈசனூர் கிளை செயலாளர் பீட்டர்ராஜ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் எஸ் ராஜு, திருக்குவளை ஆறுமுகம், சோழ வித்யாபுரம் ஆறுமுகம், திருப்பூண்டி கிராம சங்கத் தலைவர் பாப்பையன், பெரியதும்பூர் கிராம சங்கர் செயலாளர் ஜி. அன்பழகன்,விவசாய சங்க ஒன்றிய குழு உறுப்பினர் கே. தவமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு தபால்கள் அனுப்பினர். கோரிக்கைகள்

காவிரியில் குறுக்கே கர்நாடக அரசு மேகதாட்டு அணை கட்டுவதை உச்ச நீதிமன்றம் உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும்

காவேரி டெல்டா மாவட்டத்தில் தற்பொழுது சம்பா தாளடி நெற்பயிர்கள் சாகுபடி நடைபெற்று வருகிறது. இந்தப் பயிர்களை பாதுகாத்திட இன்சூரன்ஸ் மிகவும் முக்கியமானதாகும் ஆனால் குத்தகை சாகுபடி விவசாயிகள் கோயில் நிலம் மடத்தின் நிலத்தை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் செய்வதற்கு மத்திய, மாநில அரசுகள் உடனடியாக ஏற்பாடு செய்திட வேண்டும்,மேலும் சாகுபடி விவசாயிகள் வேளாண்மை தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலமாக கூட்டுறவு கடன் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனவும்

— MAHENDRAN M

### காரைக்குடியில் அம்மா உணவகம் திறப்பு விழா.



காரைக்குடி மாநகரின் மைய பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகம் புதிய ஆட்சி பதவிக்கு வந்ததும் ரூ 16 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டது. சீரமைக்கப்பட்ட இவ் உணவகத்தை இன்று கனிமவளத்துறை அமைச்சர் டி. கே. பிரபு மற்றும் காரைக்குடி மாநகராட்சி பொறுப்பு மேயர் குணசேகரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

— M. Arumugam

LOCAL

### கீழ்க்குடி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய கல் வட்டங்கள், இரும்பு உலை தடயங்கள்: தொல்லியல் கண்டுபிடிப்பு



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே உள்ள கீழ்க்குடி கிராமத்தில் தொல்லியல் துறை மாணவர் சுரேஷ் குருசாமி தலைமையில் பெருங்கற்காலம் மற்றும் சங்க காலத்தை சேர்ந்த கல் வட்டங்கள், கற்குவியல்கள், முதுமக்கள் தாழியின் பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சான்றுகள் அக்கால மக்களின் வாழ்வியல், இறந்தவர்களை அடக்கம் செய்யும் ஈமச்சடங்கு மரபுகளை அறிய உதவுகின்றன. மேலும், இரும்பு உருக்கு உலைகளின் தடயங்கள், கசடுகள், எச்சங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன.

15–16 ஆம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல் மற்றும் 5 சதிக்கற்கள் கண்டறியப்பட்டுள்ளன, இது சங்க காலத்தின் வீர மரபு, நினைவு வழிபாடுகள் மற்றும் பெண்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் பொக்கிஷ சான்றுகளாக கருதப்படுகிறது.

இந்த கண்டுபிடிப்புகள் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர்களின் மேற்பார்வையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக தொல்லியல் துறையினர் விரைந்து அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு மேலும் பல தடயங்களை வெளிக்கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

— Siva

CRIME

### விருதுநகர் மாவட்டத்தில் கஞ்சா கடத்தல்: 1.25 கி.கி கஞ்சா பிடித்து, இளைஞர் கைது



போலீசார் திருச்சுழி காவல் சார்பு ஆய்வாளர் மகேஸ்வரன் தலைமையிலான குழு, விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் இருந்து காரியாபட்டி செல்லும் சாலையில், குச்சம்பட்டி புதூர் விலக்கு ரோடு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.\n\nஅந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞரை நிறுத்தி, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் சந்தேகம் அடைந்த போலீசார், அந்த இளைஞர் கொண்டு வந்த கட்டைப்பையை சோதனை செய்ததில், அதில் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருப்பது தெரியவந்தது.\n\nகஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார், இருசக்கர வாகனம் மற்றும் அந்த இளைஞரை திருச்சுழி காவல் நிலையம் கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், அந்த இளைஞர் அருப்புக்கோட்டை அருகே உள்ள செம்பட்டி கிராமத்தை சேர்ந்த பெரியசாமி என்பவரின் மகன் பூமிநாதன் என்பதும், தற்போது குடும்பத்துடன் காரியாபட்டி தாலுகா முருகையாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருவதும் தெரியவந்தது.\n\nஇதனையடுத்து, போலீசார் 1 கிலோ 250 கிராம் உலர் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.\n\nசட்டவிரோதமாக கஞ்சா கடத்திய இளைஞர் பூமிநாதன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, திருச்சுழி போலீசார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி பின்னர் சிறையில் அடைத்தனர்.

— Siva

### காரைக்குடி தேனாற்று பகுதியில் அமைச்சர் ஆய்வு.



காரைக்குடி வழியாக பாயும் பழமை வாய்ந்த தேனாற்றில் கழிவு நீர் கலப்பதாக எழுந்த புகாரையடுத்து இன்று கனிமவளத்துரை அமைச்சர் டி. கே. பிரபு அவர்கள் லாவடியேந்தல் கிராம் அருகே உள்ள அணைக்கட்டு பகுதியை பார்வையிட்டார். உடன் அரசு அதிகாரிகள் இருந்தனர்.

— M. Arumugam

### அரசு பள்ளியில் புதிய வகுப்பறைகளை திறந்து வைத்த அமைச்சர்



காரைக்குடி சரகத்திற்கு உட்பட்ட ஜெயங்கொண்டான் கிராமம் அரசு பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டன. தலைமை ஆசிரியர் வேண்டுகோளுக்கிணங்க காரைக்குடி சட்டமன்ற உறுப்பினரும், கனிமவளத்துறை அமைச்சறுமான டி..கே. பிரபு அவர்கள் கலந்துகொண்டு வகுப்பறைகளை திறந்து வைத்தார். உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் அவர்களும் கலந்து கொண்டார்.

— M. Arumugam

### காரைக்குடி மாநகர் லட்சிய ஜனநாயக கட்சியின் புதிய செயலாளர்.



காரைக்குடி மாநகர லட்சிய ஜனநாயக கட்சியின் புதிய மாவட்ட செயலாளராக பொறியாளர் மேக்ஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு இலட்சிய ஜனநாயக கட்சியின் காரைக்குடி சட்டமன்றத்திற்கு உட்பட்ட அனைத்து உறுப்பினர்களும், நிர்வாகிகளும் ஆதரவு நல்குமாறு மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

— M. Arumugam

### காரைக்குடி - நான்கு மாணவர்களுக்காக செயல்படும் அரசு விடுதி.



காரைக்குடி அருகே புதுவயல் சமூக நீதி விடுதியில் 4 மாணவர்கள் மட்டுமே தங்கி படித்து வருகின்றனர். . ஊரின் ஒதுக்குப்புறத்தில் தனியாக உள்ள விடுதியில் காம்பவுண்ட் சுவர் இல்லை. விடுதியைச் சுற்றிலும் பலர் மது அருந்துகின்றனர். எனவே மாணவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து விடுதியை முறையாக பராமரிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர்.

— M. Arumugam

### காட்பாடி ரயில் நிலையத்தில் பரபரப்பு! ரயிலில் ஏசி இயங்காததால் பயணிகள் போராட்டம்



வேலூர் மாவட்டம், காட்பாடி ரயில் நிலையத்தில் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் ரயிலில் ஏசி வசதி முறையாகச் செயல்படாததால் ஆத்திரமடைந்த பயணிகள் காட்பாடி ரயில் நிலையத்தில் ரயிலை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒன்றரை மணி நேரமாக ரயில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் மற்றும் ரயில் நிலையத்தில் பரபரப்பான சூழல் நிலவியது.

ரயிலில் பயணம் செய்ய உரிய கட்டணம் செலுத்தியும் அடிப்படை வசதியான ஏசி செயல்படாததால் பயணிகள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

ஏசி கோளாறை உடனடியாக சரிசெய்து, பயணிகளின் குறைகளை ரயில்வே நிர்வாகம் கவனிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. சரிசெய்யப்படும் என்ற உறுதியளித்த பிறகு ரயில் புறப்பட்டு சென்றது.

— A RAM PRABHU

POLITICS

### விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே பரளச்சி அரசு மருத்துவமனை முன் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் கையெழுத்து இயக்கம்



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே பரளச்சி அரசு மருத்துவமனை முன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் தலைவராக கட்சியின் ஒன்றியச் செயலாளர் தோழர் செல்வம் முன்னிலை வகித்தார். கட்சியின் மூத்த தலைவர் தோழர் இளங்கோ, எம். ரெட்டியபட்டி கிளைச் செயலாளர் ராமச்சந்திரன், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் தோழர் மணிமாறன் உள்ளிட்ட பல நிர்வாகிகள் மற்றும் கட்சி தோழர்கள் பங்கேற்றனர்.

கையெழுத்து இயக்கத்தில் பலர் பங்கேற்று, கட்சியின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை ஆதரிக்கும் உறுதிமொழியை தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை கட்சியின் உள்ளூர் ஆதரவை உறுதிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.

— Siva

## விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே பரளச்சி அரசு மருத்துவமனை முன் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் கையெழுத்து இயக்கம்



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே பரளச்சி அரசு மருத்துவமனை முன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் தலைவராக கட்சியின் ஒன்றியச் செயலாளர் தோழர் செல்வம் முன்னிலை வகித்தார். கட்சியின் மூத்த தலைவர் தோழர் இளங்கோ, எம். ரெட்டியபட்டி கிளைச் செயலாளர் ராமச்சந்திரன், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் தோழர் மணிமாறன் உள்ளிட்ட பல நிர்வாகிகள் மற்றும் கட்சி தோழர்கள் பங்கேற்றனர்.

கையெழுத்து இயக்கத்தில் பலர் பங்கேற்று, கட்சியின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை ஆதரிக்கும் உறுதிமொழியை தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை கட்சியின் உள்ளூர் ஆதரவை உறுதிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.

— Siva

## காரைக்குடி நியாய விலைக் கடைகளில் ஆய்வு.



காரைக்குடி அண்ணாநகர் பகுதியில் உள்ள நியாய விலைக்கடையை

இரண்டாக பிரிப்பது சம்பந்தமாக

மாவட்ட வட்ட வழங்கல் அதிகாரி அவர்கள் இன்று ஆய்வு செய்தார்.

ஆய்வுக்கு பிறகு அண்ணாநகர் நியாயவிலைக்கடையை விரைவில் இரண்டாக பிரிக்க ஆவணசெய்வதாக உறுதியளித்து சென்றனர்.

— M. Arumugam

## காரைக்குடி கிட்ஸ் ஸ்கூலில் குழந்தைகள் தினக் கொண்டாட்டம்.




காரைக்குடியில் உள்ள கிட்ஸ் ஸ்கூலில், குழந்தைகள் தினத்தை முன்னிட்டு இன்று

குழந்தைகளுக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு குழந்தைகள்தினம்

கொண்டாடப்பட்டது. பள்ளி தலைமை ஆசிரியர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.

— M. Arumugam

## காரைக்குடியில் வாலிபர் நீரில் மூழ்கி உயிரிழப்பு.



காரைக்குடி அண்ணா நகரை சேர்ந்த சரவணன் என்ற வாலிபர் இன்று காலை அருகிலுள்ள குளத்தில் குளிக்க சென்ற பொழுது நீரில் மூழ்கி பலியானார். சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் உடலை கைப்பற்றி காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு, வபத்து குறித்து விசாரித்து வருகின்றனர்.

— M. Arumugam

## பயிலகத்தில் தீபாவளி கொண்டாட்டம்.



காரைக்குடியில் இயங்கி வரும் தளபதி விஜய் பயிலகத்திற்கு

இன்றைய தினம் மாண்புமிகு கனிம

வளத்துறை அமைச்சர் டாக்டர் பிரபு

அவர்கள் அறிவுரைப்படி தீபாவளி மற்றும் பயிலகம் ஆரம்பித்து 200 நாட்களை கொண்டாடும் விதமாக மாணவர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டது.

— M. Arumugam

POLITICS

## புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து மேலாண்மை ஆலோசனைக் கூட்டம்



புதுச்சேரியில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில், டிஐஜி சத்தியசுந்தரம் மற்றும் சீனியர் எஸ்பி கலைவாணன் ஆகியோர் கலந்து கொண்டு, சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து மேலாண்மை தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கம், நகரில் சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் போக்குவரத்து நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பரிசீலிப்பதாகும். பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளை சிறப்பாக அமல்படுத்தும் வழிகளை விவாதித்தனர்.

கூட்டத்தில், காவல் துறை மற்றும் போக்குவரத்து அதிகாரிகள் இடையிலான தொடர்பை வலுப்படுத்தும், அவசரநிலைகளில் விரைவான பதில் அளிக்கும் முறைகளை உருவாக்கும் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நகரின் போக்குவரத்து சீர்மையைக் கூட்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

— Sudhakaran, Puducherry

LOCAL

## ரோஜா நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு திறப்பு: டாக்டர் K. நாராயணசாமி மின்மோட்டாரை இயக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்



புதுச்சேரி, உழவர்கரை தொகுதிக்குட்பட்ட மூலக்குளம் ரோஜா நகர் பகுதியில் பொதுப்பணித்துறையின் பொதுச் சுகாதாரப் பிரிவு சார்பில் ரூ.17,23,139/- மதிப்பீட்டில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, மின்மோட்டார் மற்றும் நீரேற்று வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்தப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, உழவர்கரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திரு. K. நாராயணசாமி அவர்கள் நீரேற்று நிலையத்தைத் திறந்து வைத்து, மின்மோட்டாரை இயக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார்.

திறப்பு விழாவில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், பொறியாளர்கள் மற்றும் அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் அப்பகுதி முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மற்றும் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கு நீர்வழங்கல் சிக்கல்களை தீர்க்கும் முக்கியமான படியாகும், மேலும் பொதுச் சுகாதார மேம்பாட்டிலும் உதவும்.

— Sudhakaran, Puducherry

## முன்னாள் முதல்வர் பேட்டி



*முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி பேட்டி*

புதுச்சேரியில் காவல்துறை மோசமாக செயல்படுகிறது. இந்த ஆட்சிக்கு கெட்ட பெயர் வரவேண்டும் என்பதற்காக சக அமைச்சர்களே சதி செய்கிறார்கள். ரோந்து பணி செய்வதற்கு கூட காவல்துறையினர் லஞ்சம் கேட்கிறார்கள். காவல்துறை அமைச்சர் என்ன செய்கிறார். அமைச்சர் தூங்கி கொண்டிருக்கிறார். மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. புதுவையில் நடைபெறும் கொலைகளில் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இன்று துணை நிலை ஆளுநருக்கும்,முதலமைச்சர் ரங்கசாமிக்கும் பனிப்போர் நடக்கிறது. இந்த ஆட்சி 5 ஆண்டுகள் நடக்குமா என்கிற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. நாங்கள் கொள்கைக்காக ஆளுநருடன் போராடினோம், ஆனால் இவர்கள் கொள்ளை அடிப்பதற்காக போராடுகிறார்கள்.

— Sudhakaran, Puducherry

## காரைக்குடி சட்டமன்ற தொகுதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு.



தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெளியிடப்பட்டது. காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்கான வரைவு வாக்காளர் பட்டியலை அந்தந்த தொகுதி உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர்.

— M. Arumugam

LOCAL

## புதுச்சேரியில் 'ஆபரேஷன் புதுவை கவசம்' மூலம் கடற்கரைச் சாலைகளில் ரோந்து தீவிரப்படுத்தல்



புதுச்சேரியில் 'ஆபரேஷன் புதுவை கவசம்' என்ற பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ், காவல்துறையினர் நேற்று இரவு கடற்கரைச் சாலை, சுற்றுலாத் தளங்கள் மற்றும் முக்கியச் சாலைகளில் ரோந்து பணிகளை தீவிரப்படுத்தினர்.

இந்த நடவடிக்கையை துணைக் காவல் தலைவர் டிஐஜி சத்தியசுந்தரம் ஐ.பி.எஸ். மற்றும் காவல் மூத்த கண்காணிப்பாளர்கள் கலைவாணன், நித்யா ராதாகிருஷ்ணன் ஆகியோரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டது.

பொது இடங்களில் மது அருந்துவோர் மீது நடவடிக்கை, சந்தேக வாகனங்கள் சோதனை மற்றும் திடீர் வாகனத் தணிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையால் நகரின் பாதுகாப்பு நிலை உயர்த்தப்பட்டு, பொது மக்களின் பாதுகாப்பு உணர்வு மேம்படுத்தப்பட்டுள்ளது.

— Sudhakaran, Puducherry

## குன்றக்குடியில் வேளாண் பயிற்சி முகாம்.




காரைக்குடி அருகே குன்றக்குடியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில், வேளாண் பயன்பாட்டில் புதுப்பிக்கதக்க ஆற்றல் தொழில் நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான இலவச பயிற்சி நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

— M. Arumugam

## சாலைகளில் சுற்றித் திரிந்த மாடுகளை பிடித்து வேலூர் மாநகராட்சி நடவடிக்கை: ரூ.6 ஆயிரம் அபராதம் விதிப்பு..



சாலைகளில் சுற்றித் திரிந்த மாடுகளை பிடித்து வேலூர் மாநகராட்சி நடவடிக்கை; ரூ.6 ஆயிரம் அபராதம் விதிப்பு..

வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட முக்கிய சாலைகளில் சுற்றித் திரியும் கால்நடைகளால் வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் விபத்து அபாயமும் ஏற்பட்டு வந்தது. இதையடுத்து

சாலைகளில் திரியும் மாடுகளைப் பிடிக்கும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி மாநகராட்சி உட்பட்ட ஆற்காடு சாலை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாகத் சாலையில் சுற்றி திரிந்த மாடுகளை மாநகராட்சி பணியாளர்கள் பிடித்தனர்.

மேலும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு ரூ 6 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கும் வாகனப் போக்குவரத்திற்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் கால்நடைகளைச் சாலைகளில் திரியவிட்டால் அவை தொடர்ந்து பறிமுதல் செய்யப்பட்டு உரிமையாளர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாநகராட்சி அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு வாகன ஓட்டிகள் பொதுமக்கள் பாராட்டி மேலும் புதிய பேருந்து நிலையம், விருதம்பட்டு, காட்பாடி, தோட்டபாளையம், காட்பாடி சாலை, ஆபிசர் லைன், அண்ணா சாலை போன்ற பிரதான சாலைகளில் உள்ள மாடுகளை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறுகின்றனர்.

— A RAM PRABHU

## காட்பாடியில் இந்து முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் இந்து சமய அறநிலையத் துறையைக் கண்டித்து இந்து முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

காட்பாடியில் உள்ள தாரபடவேடு மதுரா சுந்தரி அம்மன் கோவிலில் பூஜைகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கோவில் இடத்தில் கடை வைத்துள்ள மாற்று மதத்தைச் சேர்ந்த நபர் கோவிலின் பாரம்பரிய ஆன்மீக நடைமுறைகளுக்கு அத்துமீறி இடையூறு செய்து, கிண்டல் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இதற்கு உடந்தையாகச் செயல்படும் அறநிலையத் துறை செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்காத அறநிலையத் துறை இணை ஆணையரின் மெத்தனப் போக்கை கண்டித்தும் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில்

உறுப்பினர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

— A RAM PRABHU

CRIME

## 13 வயது காணாமல் போன சிறுமி லாஸ்பேட்டை காவல் நிலையம் விரைவாக மீட்டது – DIG பாராட்டு



10.11.2026 அன்று காலை பள்ளிக்குச் சென்ற 13 வயது சிறுமி, லாஸ்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அவ்வை நகரில் மாலையில் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் புகார் செய்தனர்; போலீஸ் வழக்கு பதிவு செய்து விசாரணை தொடங்கியது.

திரு. சத்திய சுந்தரம் DIG, திரு. கலைவாணன் SSP, திரு. அனுராக் சோப்ரா கண்காணிப்பாளர் (வடக்கு) ஆகியோரின் உத்தரவின்படி, லாஸ்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் திரு. பாலமுருகன் தலைமையில் வடக்கு குற்றப்பிரிவு மற்றும் லாஸ்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு காவலர்கள் இணைந்து துரிதமாக நடவடிக்கை எடுத்து, சிறுமியை பாதுகாப்பாக மீட்டனர்.

மீட்பு பிறகு சிறுமிக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு, பெற்றோருடன் பாதுகாப்பாக சேர்க்கப்பட்டது.

இந்த வேகமான மற்றும் திறமையான நடவடிக்கைக்கு DIG திரு. சத்திய சுந்தரம் அவர்களால் காவல்துறையினர் பாராட்டப்பட்டனர்.

— Sudhakaran

## காரைக்குடியில் இளைஞர் நாடாளுமன்றம்.



காரைக்குடி அருகே புதுவயலில்

உள்ள வித்யாகிரி கலை மற்றும்

அறிவியல் கல்லூரியில், இன்று இந்திய அரசின் இளைஞர் நலன்

மற்றும் விளையாட்டு அமைச்சகம்,

MY Bharat கேந்திரா சிவகங்கை

மற்றும் கல்லூரி சார்பில் மாவட்ட

அளவிலான விக்சித் பாரத் இளைஞர்

நாடாளுமன்றம் 2026-2027

நிகழ்ச்சி நடைபெற்றன. இதில் கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள்,

Bharat தன்னார்வலர்கள் கலந்து

கொண்டனர்.

— M. Arumugam

CRIME

## திருச்சுழி தேவர் சிலை அருகில் CCTV கேமராக்கள் சேதம், 35 வயது அருண்குமார் கைது



வருவாய்த்துறை அதிகாரிகள் திருச்சுழி மாவட்டம் திருச்சுழி தேவர் சிலை அருகில் அமைந்த CCTV கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் சுவர் சேதம் கண்டறிந்து, உடனடியாக விசாரணை தொடங்கினர்.

விசாரணையில், திருச்சுழி மேலத்தெருவை சேர்ந்த 35 வயது முத்துராமலிங்கம் மகன் அருண்குமார், இரவு நேரத்தில் பேவர் பிளாக் கற்களைப் பயன்படுத்தி கேமராக்களை சேதப்படுத்தி, சுவரை உடைத்தார் என்று தெரியவந்தது.

அருண்குமார் பொதுமக்களுக்கு கொலை மிரட்டல் செய்ததாகவும், இதைத் தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர் சந்தனமாரி புகார் அளித்து, திருச்சுழி போலீசார் வழக்குப் பதிவு செய்து அவரை அதிரடியாக கைது செய்தனர்.

காவல்துறை விசாரணை தொடர்கிறது; சம்பவம் தொடர்பான கூடுதல் தகவல்கள் கிடைக்கும் போது புதுப்பிக்கப்படும்.

— Siva